U care centre

# PROGRESSIVE WAGE MODEL

## Model Gaji Progresif Untuk Industri Pengurusan Sisa

## கழிவுப்பொருள் நிர்வாகத் துறைக்கான படிப்படியான சம்பள உயர்வு முறை




## Empat Tangga

# Model Gaji Progresif

## படிப்படியான சம்பள உயர்வு முறையின் நான்கு ஏணிகள்

Model Gaji Progresif (PWM) menyediakan laluan kemajuan kerjaya yang jelas, membolehkan para pekerja kita meraih **Gaji Lebih Baik** dengan **Prospek Pekerjaan yang Lebih Baik** sedang mereka menjadi **Lebih Berkemahiran** dan **Lebih Produktif**.

PWM ini dikenakan kepada semua pekerja pemastautin, iaitu **Warganegara Singapura dan Penduduk Tetap** dalam sektor ini. Pekerja sambilan hendaklah dibayar mengikut gaji PWM pro-rata.




படிப்படியான சம்பள உயர்வு முறை (PWM), தெளிவான முன்னேற்றப் பாதையை வகுத்துத் தருகிறது. நமது ஊழியர்கள் **மேம்பட்ட திறன் பெற்று**, **உற்பத்தித்திறனை வளர்த்துக் கொள்ளும்போது**, **மேம்பட்ட வேலை வாய்ப்புகளோடு மேம்பட்ட சம்பளம் பெற** இப்பாதை துணை புரிகிறது.

சிங்கப்பூர்வாழ் ஊழியர்கள், அதாவது இந்தத் துறையில் பணிபுரியும் **சிங்கப்பூரர்கள் / நிரந்தரவாசிகள்** அனைவருக்கும் PWM பொருந்தும். பகுதிநேர ஊழியர்களுக்கு விகிதப்படியான PWM சம்பளம் கிடைக்கும்.

Nota: *Bagi firma yang menggajikan pekerja asing, majikan digalak mengamalkan prinsip utama gaji progresif dalam struktur gaji mereka.*

குறிப்பு: *வெளிநாட்டு ஊழியர்களை வேலைக்குச் சேர்க்கும் நிறுவனங்கள், படிப்படியான சம்பள உயர்வு முறையின் முக்கிய கொள்கைகளைத் தங்களது சம்பள முறையில் உள்ளடக்க ஊக்குவிக்கப்படுகின்றன.*

Untuk maklumat lanjut mengenai PWM, sila hubungi Pusat NTUC U Care:
PWM பற்றி மேல்விவரம் அறிய, என்டியுசி யு கேர் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்:


**NTUC U Care Centre**
1800-CALL-PWM (1800-2255-796) (Mon – Fri: 9am – 6pm)
ucarecentre@ntuc.org.sg
https://www.ntuc.org.sg/ucarecentre /ucarecentre


An ntuc Initiative


© 2024 NTUC All Rights Reserved

All information in this publication is accurate as of July 2024

Pada Oktober 2020, Kumpulan Kerja Tiga Pihak bagi Pekerja Bergaji Rendah (TWG-LWW) telah dibentuk untuk meninjau cara-cara untuk meningkatkan lagi gaji dan kesejahteraan para pekerja bergaji rendah (LWWS). Ini termasuk peluasan Model Gaji Progresif (PWM) kepada lebih banyak sektor serta memastikan agar pertumbuhan gaji pekerja bergaji rendah terus mengatasi pertumbuhan gaji median.

Kluster Triparti bagi Industri Pengurusan Sisa (TCWM), yang diwakili oleh persatuan-persatuan industri, majikan, pembeli perkhidmatan, kesatuan sekerja dan agensi Pemerintah, telah mengeluarkan saranan pada 24 Januari 2022 yang diterima Pemerintah.

PWM Pengurusan Sisa meliputi para pekerja PWM pemastautin (iaitu Warganegara Singapura dan Penduduk Tetap) dalam sub-sektor Pengumpulan Sisa dan Pemulihan Bahan mulai 1 Julai 2023.

குறைந்த வருமான ஊழியர்களின் சம்பளத்தையும் நலனையும் மேலும் மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை ஆராய, 2020 அக்டோபர் மாதம், குறைந்த வருமான ஊழியர்களுக்கான முத்தரப்புப் பணிக்குழு (TWG-LWW) அமைக்கப்பட்டது. படிப்படியான சம்பள உயர்வு முறையை (PWM) மேலும் பல துறைகளுக்கு விரிவுபடுத்துவதும், குறைந்த வருமான ஊழியரின் சம்பளம் தொடர்ந்து இடைநிலை சம்பள வளர்ச்சியைவிட வேகமாக வளர்ச்சி அடைவதை உறுதி செய்வதும் இதில் உள்ளடங்கின.

தொழில்துறை சங்கங்கள், முதலாளிகள், சேவை வாங்குநர்கள், தொழிற்சங்கங்கள், அரசாங்க அமைப்புகள் ஆகியவை பிரதிநிதிக்கப்படும் கழிவுப்பொருள் நிர்வாகத் துறைக்கான முத்தரப்புக் குழுமம் (TCWM), 24 ஜனவரி 2022 அன்று தனது பரிந்துரைகளை வெளியிட்டது. அவற்றை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

கழிவுப்பொருள் நிர்வாகத் துறைக்கான PWM, 1 ஜூலை 2023 தேதியிலிருந்து, கழிவுப்பொருள் சேகரிப்பு, மூலப்பொருள் மீட்பு ஆகிய துணைத் துறைகளில் வேலை செய்யும் சிங்கப்பூர்வாழ் PWM ஊழியர்களை (சிங்கப்பூரர்/நிரந்தரவாசி) உள்ளடக்குகிறது.

Untuk membaca laporan penuh Kluster Triparti bagi Industri Pengurusan Sisa (TCWM), sila imbas Kod QR atau lungsuri www.ntuc.org.sg/pwm

முழுமையான TCWM அறிக்கையைப் படிக்க, விரைவுத் தகவல் குறியீட்டை ஒளிவருடல் செய்யுங்கள் அல்லது www.ntuc.org.sg/pwm இணையத்தளத்தை நாடுங்கள்

# Tangga Kerjaya PWM
## PWM வாழ்க்கைத் தொழில் ஏணி

Untuk menyediakan laluan kemajuan kerjaya yang jelas dalam sektor pengurusan sisa, Kluster Triparti bagi Industri Pengurusan Sisa (TCWM) telah memetakan peranan pekerjaan operasi dan penyeliaan dalam dua sub-sektor iaitu (a) Sub-Sektor Pengumpulan Sisa dan (b) Sub-Sektor Pemulihan Bahan.

கழிவுப்பொருள் நிர்வாகத் துறையில் வாழ்க்கைத் தொழில் முன்னேற்றத்திற்குத் தெளிவான பாதையை வகுத்துத்தர, (a) கழிவுப்பொருள் சேகரிப்பு துணைத் துறை மற்றும் (b) மூலப்பொருள் மீட்பு துணைத் துறை ஆகியவற்றில் உள்ள செயலாக்க, மேற்பார்வை பணிகளை TCWM தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

### Sub-Sektor Pengumpulan Sisa

*Bagi Pemungut Sisa Awam dan Pemungut Sisa Umum yang memegang lesen NEA, A, B dan C*

### கழிவுப்பொருள் சேகரிப்பு துணைத் துறை


*தேசிய சுற்றுப்புற அமைப்பின் A, B, C உரிமங்கள் வைத்திருக்கும் பொது கழிவுப்பொருள் சேகரிப்பாளர்கள் (PWCs), பொதுவான கழிவுப்பொருள் சேகரிப்பாளர்கள் (GWCs) ஆகியோருக்குப் பொருந்தும்*

### Sub-Sektor Pemulihan Bahan

*Bagi Pemegang Lesen Kemudahan Pelupusan Sisa Am*

### மூலப்பொருள் மீட்பு துணைத் துறை

*பொதுவான கழிவுப்பொருள் அகற்றல் ஆலைகளுக்குப் ஆலைகளின் (GWDFs) உரிமதாரர்களுக்குப் பொருந்தும்*




*Nota: Di bawah Sub-Sektor Pengumpulan Sisa, seorang Krew / Krew Kanan / Ketua Pasukan boleh dikerah sebagai Pemandu dengan syarat pekerja tersebut telah memperolehi sekurang-kurangnya lesen memandu kelas 4 dan memenuhi keperluan latihan yang diperlukan.*

குறிப்பு: கழிவுப்பொருள் சேகரிப்பு துணைத் துறையின்கீழ், பணியாளர் / மூத்த பணியாளர் / அணித் தலைவர் குறைந்தது பிரிவு 4 ஓட்டுநர் உரிமமும் தேவையான பயிற்சியும் பெற்றிருந்தால், ஓட்டுநராகப் பணியமர்த்தப்படலாம்.

# *mempunyai lesen memandu kelas 4 dan mengendalikan pemuat bahagian belakang atau trak hooklift.*

# *பிரிவு 4 ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பவர், ரியர் எண்ட் லோடர் அல்லது ஹூக்லிஃப்ட் இயக்குபவர்.*

# Tangga Kemahiran PWM
## PWM திறன்கள் ஏணி

Tangga Kemahiran PWM memastikan pekerja pengurusan sisa akan mempunyai kemahiran dan kecekapan yang diperlukan untuk menjalankan tugas mereka dengan cekap dan selamat.

Untuk memenuhi syarat pelesenan Agensi Sekitaran Kebangsaan (NEA) bagi Pemungut Sisa Umum (GWCs) dan Kemudahan Pelupusan Sisa Am (GWDFs), semua pekerja pemastautin pengurusan sisa bagi semua syarikat pengurusan sisa mesti mencapai keperluan latihan mandatori berdasarkan peranan pekerjaan masing-masing berkuat kuasa dari 1 Julai 2023.

கழிவுப்பொருள் நிர்வாக ஊழியர்கள் தங்களது வேலையைத் திறம்படவும் பாதுகாப்பாகவும் செய்வதற்குத் தேவையான திறன்களைப் பெற்றிருப்பதை PWM திறன்கள் ஏணி உறுதி செய்கிறது.

பொதுவான கழிவுப்பொருள் சேகரிப்பாளர்கள் (GWCs), பொதுவான கழிவுப்பொருள் அகற்றல் ஆலைகள் (GWDFs) ஆகியவற்றுக்கான தேசிய சுற்றுப்புற அமைப்பின் (NEA) உரிமம் வழங்கும் நிபந்தனைகளை நிறைவேற்ற, கழிவுப்பொருள் நிர்வாக நிறுவனங்களின் தகுதிபெறும் சிங்கப்பூர்வாழ் கழிவுப்பொருள் நிர்வாக ஊழியர்கள் அனைவரும், 1 ஜூலை 2023 தேதியிலிருந்து, தத்தம் வேலைப் பொறுப்புகளின் அடிப்படையில் கட்டாயப் பயிற்சி பெறவேண்டும்.

### Sub-Sektor Pengumpulan Sisa
### கழிவுப்பொருள் சேகரிப்பு துணைத் துறை

| Peranan Pekerjaan PWM<br>PWM வேலைப் பொறுப்பு | Keperluan Latihan PWM<br>PWM பயிற்சித் தேவைகள் |
|---|---|
| Krew<br>பணியாளர் | 2 modul mandatori WSQ<br>2 கட்டாய WSQ பாடத்தொகுதிகள் |
| Krew Kanan<br>மூத்த பணியாளர் | 3 modul mandatori WSQ (kumulatif)^<br>3 கட்டாய WSQ பாடத்தொகுதிகள் (மொத்தமாக)^ |
| Ketua Pasukan<br>அணித் தலைவர் | |
| Penyelia<br>மேற்பார்வையாளர் | 4 modul mandatori WSQ (kumulatif)^<br>4 கட்டாய WSQ பாடத்தொகுதிகள் (மொத்தமாக)^ |

| Peranan Pekerjaan PWM<br>PWM வேலைப் பொறுப்பு | Keperluan Latihan PWM<br>PWM பயிற்சித் தேவைகள் |
|---|---|
| Krew<br>பணியாளர் | 2 modul mandatori WSQ<br>2 கட்டாய WSQ பாடத்தொகுதிகள் |
| Pemandu#<br>ஓட்டுநர் | 3 modul mandatori WSQ (kumulatif)^<br>3 கட்டாய WSQ பாடத்தொகுதிகள் (மொத்தமாக)^ |
| Pemandu Kanan<br>மூத்த ஓட்டுநர் | |
| Kapten<br>கேப்டன் | 4 modul mandatori WSQ (kumulatif)^<br>4 கட்டாய WSQ பாடத்தொகுதிகள் (மொத்தமாக)^ |

### Sub-Sektor Pemulihan Bahan
### மூலப்பொருள் மீட்பு துணைத் துறை

| Peranan Pekerjaan PWM<br>PWM வேலைப் பொறுப்பு | Keperluan Latihan PWM<br>PWM பயிற்சித் தேவைகள் |
|---|---|
| Penyusun<br>வகைப்பாட்டாளர் | 2 modul mandatori WSQ<br>2 கட்டாய WSQ பாடத்தொகுதிகள் |
| Penyusun Kanan<br>மூத்த வகைப்பாட்டாளர் | 3 modul mandatori WSQ (kumulatif)^<br>3 கட்டாய WSQ பாடத்தொகுதிகள் (மொத்தமாக)^ |
| Operator Mesin<br>இயந்திரம் இயக்குபவர் | |
| Ketua Pasukan<br>அணித் தலைவர் | |
| Penyelia Loji<br>ஆலை மேற்பார்வையாளர் | 4 modul mandatori WSQ (kumulatif)^<br>4 கட்டாய WSQ பாடத்தொகுதிகள் (மொத்தமாக)^ |

*Nota: Kursus-kursus hanya dikendalikan dalam Bahasa Inggeris. Sila rujuk senarai kursus di laporan penuh Kluster Triparti bagi Industri Pengurusan Sisa (TCWM).*

குறிப்பு: பயிற்சி வகுப்புகள் ஆங்கிலத்தில் மட்டுமே நடத்தப்படும்.

^ *modul kumulatif akan merangkumi modul WSQ yang dicapai pada tahap pekerjaan sebelumnya.*

# *mempunyai lesen memandu kelas 4 dan mengendalikan pemuat bahagian belakang atau trak hooklift.*

^ மொத்த பாடத்தொகுதிகளில் முந்திய வேலை நிலையில் பூர்த்திசெய்த WSQ பாடத்தொகுதிகள் உள்ளடங்கும்.

# *பிரிவு 4 ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பவர், ரியர் எண்ட் லோடர் அல்லது ஹூக்லிஃப்ட் இயக்குபவர்.*

# Tangga Gaji PWM
## PWM சம்பள ஏணி

Tangga Gaji PWM menetapkan gaji garis dasar dan kenaikan tahunan yang mampan sejajar dengan peranan pekerjaan masing-masing.

Selaras dengan saranan Kumpulan Kerja Tiga Pihak bagi Pekerja Bergaji Rendah (TWG-LWW) supaya gaji progresif yang perlu dinyatakan dalam terma kasar, Kluster Triparti bagi Industri Pengurusan Sisa (TCWM), menyarankan satu set gaji garis dasar kasar (tidak termasuk OT) dan kadar bayaran gaji lebih masa yang sama.

Kluster Triparti bagi Industri Pengurusan Sisa (TCWM) juga mengesyorkan kenaikan tahunan tetap untuk semua peringkat pekerjaan, dengan pertumbuhan gaji yang lebih cepat untuk peringkat pekerjaan yang lebih rendah. Ini sejajar dengan panduan Kumpulan Kerja Tiga Pihak bagi Pekerja Bergaji Rendah (TWG-LWW) agar pertumbuhan gaji bagi pekerja yang bergaji rendah melebihi kadar pertumbuhan gaji pekerja median.

PWM சம்பள ஏணி, வேலைப் பொறுப்புகளுக்கு ஏற்ப நிலையான சம்பள உயர்வை வழங்குகிறது.

படிப்படியாக உயரும் சம்பளத்தை மொத்தமாகக் குறிப்பிடுமாறு TWG-LWW குழுமம் செய்த பரிந்துரைக்கு ஏற்ப, மொத்த அடிப்படைச் சம்பளங்களையும் (மிகைநேரச் சம்பளத்தைச் சேர்க்காமல்) அவற்றுக்குரிய மிகைநேரச் சம்பள விகிதத்தையும் TCWM பரிந்துரைத்தது.

எல்லா வேலை நிலைகளுக்கும் ஆண்டுதோறும் நிலையான சம்பள உயர்வு வழங்கவும் TCWM பரிந்துரைக்கிறது. குறைந்த வருமான ஊழியரின் சம்பளம் இடைநிலை சம்பள வளர்ச்சியைவிட வேகமாக வளர்ச்சி அடைய TWG-LWW குழுமம் வெளியிட்ட வழிகாட்டியின்படி இது பரிந்துரைக்கப்படுகிறது.

PWM Gaji Garis Dasar Kasar (tidak termasuk OT) bagi **Sub-Sektor Pengumpulan Sisa** berkuat kuasa mulai 1 Julai setiap tahun. (Bagi Pemungut Sisa Awam dan Pemungut Sisa Umum yang memegang lesen NEA, A, B dan C)

**கழிவுப்பொருள் சேகரிப்பு துணைத் துறைக்கு** ஒவ்வோர் ஆண்டும் ஜூலை முதல் தேதி நடப்புக்கு வரும் PWM மொத்த அடிப்படைச் சம்பளங்கள் (மிகைநேரச் சம்பளத்தைச் சேர்க்காமல்). (தேசிய சுற்றுப்புற அமைப்பின் A, B, C உரிமம் வைத்திருக்கும் பொது கழிவுப்பொருள் சேகரிப்பாளர்கள், பொதுவான கழிவுப்பொருள் சேகரிப்பாளர்கள் ஆகியோருக்குப் பொருந்தும்)

### Peranan Pekerjaan PWM PWM வேலைப் பொறுப்பு

| Peranan Pekerjaan PWM / PWM வேலைப் பொறுப்பு | 2023 | 2024 | 2025 | 2026 | 2027 | 2028 |
|---|---|---|---|---|---|---|
| Kapten / கேப்டன் | Gaji dibiarkan kepada kuasa pasaran / சம்பளங்கள் சந்தைச் சூழலுக்கு விட்டுவிடப்பட்டது | | | | | |
| Pemandu Kanan / மூத்த ஓட்டுநர் | $2,910<br>$21.32 | $3,120<br>$22.97 | $3,330<br>$24.62 | $3,540<br>$26.28 | $3,750<br>$27.93 | $3,960<br>$29.58 |
| Pemandu Hooklift / ஹூக்லிஃப்ட் ஓட்டுநர் | $2,710<br>$19.75 | $2,920<br>$21.40 | $3,130<br>$23.05 | $3,340<br>$24.70 | $3,550<br>$26.35 | $3,760<br>$28.01 |
| Pemandu / ஓட்டுநர் | $2,610<br>$18.96 | $2,820<br>$20.61 | $3,030<br>$22.26 | $3,240<br>$23.92 | $3,450<br>$25.57 | $3,660<br>$27.22 |
| Krew / பணியாளர் | $2,210<br>$16.60 | $2,420<br>$18.25 | $2,630<br>$19.90 | $2,840<br>$21.56 | $3,050<br>$23.21 | $3,260<br>$24.86 |

Gaji Kasar Bulanan (tidak termasuk OT)
மொத்த சம்பளம் (மிகைநேரச் சம்பளத்தைச் சேர்க்காமல்)

Kadar Bayaran Gaji OT
மிகைநேரச் சம்பள விகிதம்

PWM Gaji Garis Dasar Kasar (tidak termasuk OT) bagi **Sub-Sektor Pengumpulan Sisa** berkuat kuasa mulai 1 Julai setiap tahun. (Bagi Pemungut Sisa Awam dan Pemungut Sisa Umum yang memegang lesen NEA, A, B dan C)

**கழிவுப்பொருள் சேகரிப்பு துணைத் துறைக்கு** ஒவ்வோர் ஆண்டும் ஜூலை முதல் தேதி நடப்புக்கு வரும் PWM மொத்த அடிப்படைச் சம்பளங்கள் (மிகைநேரச் சம்பளத்தைச் சேர்க்காமல்). (தேசிய சுற்றுப்புற அமைப்பின் A, B, C உரிமம் வைத்திருக்கும் பொது கழிவுப்பொருள் சேகரிப்பாளர்கள், பொதுவான கழிவுப்பொருள் சேகரிப்பாளர்கள் ஆகியோருக்குப் பொருந்தும்)

## Peranan Pekerjaan PWM PWM வேலைப் பொறுப்பு

| Peranan Pekerjaan PWM | 2023 | 2024 | 2025 | 2026 | 2027 | 2028 |
|---|---|---|---|---|---|---|
| Penyelia<br>மேற்பார்வையாளர் | $2,860<br>$21.71 | $3,070<br>$23.37 | $3,280<br>$25.02 | $3,490<br>$26.67 | $3,700<br>$28.32 | $3,910<br>$29.97 |
| Ketua Pasukan<br>அணித் தலைவர் | $2,610<br>$19.75 | $2,820<br>$21.40 | $3,030<br>$23.05 | $3,240<br>$24.70 | $3,450<br>$26.35 | $3,660<br>$28.01 |
| Krew Kanan<br>மூத்த பணியாளர் | $2,410<br>$18.17 | $2,620<br>$19.83 | $2,830<br>$21.48 | $3,040<br>$23.13 | $3,250<br>$24.78 | $3,460<br>$26.43 |
| Krew<br>பணியாளர் | $2,210<br>$16.60 | $2,420<br>$18.25 | $2,630<br>$19.90 | $2,840<br>$21.56 | $3,050<br>$23.21 | $3,260<br>$24.86 |

Gaji Kasar Bulanan (tidak termasuk OT)
மொத்த சம்பளம் (மிகைநேரச் சம்பளத்தைச் சேர்க்காமல்)

Kadar Bayaran Gaji OT
மிகைநேரச் சம்பள விகிதம்

PWM Gaji Garis Dasar Kasar (tidak termasuk OT) bagi **Sub-Sektor Pemulihan Bahan** berkuat kuasa mulai 1 Julai setiap tahun (bagi Pemegang Lesen Kemudahan Pelupusan Sisa Am)

**மூலப்பொருள் மீட்பு துணைத் துறைக்கான** PWM மொத்த அடிப்படைச் சம்பளங்களும் (மிகைநேரச் சம்பளத்தைச் சேர்க்காமல்), வருடாந்தரச் சம்பள உயர்வின் பல்லாண்டு அட்டவணையும், 1 ஜூலை 2023 முதல் நடப்புக்கு வந்த மிகைநேரச் சம்பள விகிதமும் (பொதுவான கழிவுப்பொருள் அகற்றல் ஆலைகளின் உரிமதாரர்களுக்குப் பொருந்தும்)

## Peranan Pekerjaan PWM PWM வேலைப் பொறுப்பு

| Peranan Pekerjaan PWM / PWM வேலைப் பொறுப்பு | 2023 | 2024 | 2025 | 2026 | 2027 | 2028 |
|---|---|---|---|---|---|---|
| Penyelia Loji<br>ஆலை மேற்பார்வையாளர் | $2,710<br>$20.53 | $2,920<br>$22.19 | $3,130<br>$23.84 | $3,340<br>$25.49 | $3,550<br>$27.14 | $3,760<br>$28.79 |
| Ketua Pasukan<br>அணித் தலைவர் | $2,510<br>$18.96 | $2,720<br>$20.61 | $2,930<br>$22.26 | $3,140<br>$23.92 | $3,350<br>$25.57 | $3,560<br>$27.22 |
| Penyusun Kanan / Operator Mesin<br>மூத்த வகைப்பாட்டாளர் / இயந்திரம் இயக்குபவர் | $2,310<br>$17.39 | $2,520<br>$19.04 | $2,730<br>$20.69 | $2,940<br>$22.34 | $3,150<br>$23.99 | $3,360<br>$25.65 |
| Penyusun<br>வகைப்பாட்டாளர் | $2,110<br>$15.81 | $2,320<br>$17.47 | $2,530<br>$19.12 | $2,740<br>$20.77 | $2,950<br>$22.42 | $3,160<br>$24.07 |

Gaji Kasar Bulanan (tidak termasuk OT)
மொத்த சம்பளம் (மிகைநேரச் சம்பளத்தைச் சேர்க்காமல்)

Kadar Bayaran Gaji OT
மிகைநேரச் சம்பள விகிதம்

Nota:

- *Jumlah gaji kasar bulanan merujuk kepada jumlah gaji asas bulanan, bayaran OT, komisen, elaun dan bayaran tunai yang lain-lain, dan sebelum potongan CPF pekerja. Ia tidak termasuk bonus (contohnya AWS), opsyen saham, bayaran sekaligus yang lain dan bayaran gaji dalam bentuk barangan serta sumbangan CPF majikan.*
- *Krew / Krew Kanan / Ketua Pasukan boleh dikerah sebagai Pemandu dengan syarat pekerja tersebut telah memperolehi sekurang-kurangnya lesen memandu kelas 4 dan memenuhi keperluan latihan yang diperlukan.*
- *Kadar Bayaran Gaji OT merujuk kepada kadar gaji minimum untuk setiap jam bekerja melebihi masa mengikut kontrak yang ditetapkan. Bahagian 4 Akta Pekerjaan bagi kadar bayaran gaji OT harus dibayar sekurang-kurangnya 1.5x kadar gaji asas terus dikenakan.*

குறிப்பு:

- மொத்த மாதச் சம்பளம் என்பது மாதாந்தர அடிப்படைச் சம்பளம், மிகைநேரச் சம்பளம், தரகுத்தொகை, செலவுத்தொகை, மற்ற ரொக்க வழங்கீடுகள் ஆகியவற்றை ஒன்றாகக் கூட்டி, ஊழியரின் மத்திய சேம நிதிச் சந்தாவைக் கழிப்பதற்கு முந்திய மொத்த தொகையாகும். போனஸ் (எ.கா. வருடாந்தர சம்பள நிரப்புத்தொகை (AWS)), பங்குரிமைகள், மற்ற மொத்தத் தொகை வழங்கீடுகள், முதலாளி செலுத்தும் மத்திய சேம நிதிச் சந்தா போன்ற ரொக்கமல்லாத வழங்கீடுகள் ஆகியவை இதில் உள்ளடங்காது.
- பணியாளர் / மூத்த பணியாளர் / அணித் தலைவர் குறைந்தது பிரிவு 4 ஓட்டுநர் உரிமமும் தேவையான பயிற்சியும் பெற்றிருந்தால், ஓட்டுநராகப் பணியமர்த்தப்படலாம்.
- மிகைநேரச் சம்பள விகிதம் என்பது, ஒப்பந்தப்படியான வேலை நேரத்திற்குமேல் கூடுதலாக வேலை செய்யும் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் வழங்கப்படும் குறைந்தபட்ச சம்பளத்தைக் குறிக்கிறது. வேலை நியமனச் சட்டத்தின் பகுதி 4-ன்படி, மிகைநேரச் சம்பள விகிதம், அடிப்படைச் சம்பள விகிதத்தில் குறைந்தது 1.5 மடங்கு என்ற விதிமுறை தொடர்ந்து நடப்பிலுள்ளது.

# Pelaksanaan Bonus PWM
## PWM போனஸ் அமலாக்கம்

Untuk menarik dan mengekalkan pekerja, Kluster Triparti bagi Industri Pengurusan Sisa (TCWM) menyarankan Bonus PWM mandatori bagi pekerja pengurusan sisa yang layak mulai 1 Januari 2024. Ini adalah untuk memberi insentif kepada syarikat untuk melabur lebih banyak dalam latihan pekerja yang kekal untuk meningkatkan lagi produktiviti mereka.

Kuantum Bonus PWM hendaklah tidak kurang daripada satu bulan gaji asas bulanan pekerja dan ia tidak terikat kepada prestasi pekerja.

Bonus PWM mesti dibuat sekurang-kurangnya setahun sekali, tetapi tidak melebihi dua kali setahun. Bonus berkenaan mesti disenaraikan dalam slip gaji dan tertakluk kepada sumbangan CPF oleh kedua-dua majikan dan pekerja.

Para majikan diberikan kelonggaran untuk menentukan bulan mana dalam tahun itu yang akan menjadi tarikh penentuan pengiraan Bonus PWM. Namun, mereka mesti membuat pembayaran Bonus PWM dalam masa sebulan dari tarikh penentuan tersebut, atau pada hari terakhir pekerja bekerja, mengikut mana yang lebih awal.

Majikan dinasihatkan untuk berkomunikasi dengan jelas kepada pekerja-pekerja mereka melalui pekeliling kakitangan mengenai kelayakan Bonus PWM dan dasar mereka mengenai jadual pembayaran.

ஊழியர்களை ஈர்க்கவும், தக்கவைக்கவும், தகுதிபெறும் கழிவுப்பொருள் நிர்வாக ஊழியர்களுக்கு 1 ஜனவரி 2024 முதல் கட்டாய PWM போனஸ் தரவேண்டும் என்று TCWM பரிந்துரைத்தது. வேலையில் நீடித்திருக்கும் ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்க நிறுவனங்கள் கூடுதலாக முதலீடு செய்ய இது ஊக்கமளிக்கும். இதன்வழி ஊழியர்களின் உற்பத்தித்திறனும் உயரும்.

PWM போனஸ் தொகை, ஊழியரின் ஒரு மாத அடிப்படைச் சம்பளத்தைவிடக் குறைவாக இருக்கக்கூடாது. அதோடு, ஊழியரின் செயல்திறனுடன் தொடர்புபடுத்தப்படக்கூடாது.

PWM போனஸ் ஓர் ஆண்டில் குறைந்தது ஒருமுறை தரப்படவேண்டும். ஆனால், ஓர் ஆண்டில் இரண்டு முறைக்குமேல் தரப்படக்கூடாது. இந்த போனஸ், சம்பளச் சீட்டில் குறிப்பிடப்படவேண்டும். முதலாளி, ஊழியர் இருவருமே இதற்கு மத்திய சேம நிதி சந்தா செலுத்தவேண்டும்.

PWM போனஸ் கணக்கீட்டுக்கான காலகட்டம் ஆண்டின் எந்த மாதத்தில் முடிவடையவேண்டும் என்பதை நிர்ணயிக்க முதலாளிகளுக்கு நீக்குப்போக்கு தரப்படுகிறது. ஆனால், காலகட்டம் முடிவடையும் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள், அல்லது ஊழியரின் கடைசி வேலை நாளன்று PWM போனஸ் தரப்படவேண்டும்.

PWM போனஸ் தகுதிநிலை, வழங்கீட்டுக் காலகட்டம் குறித்த கொள்கை பற்றி சுற்றறிக்கை மூலம் ஊழியர்களிடம் தெளிவாகத் தெரியப்படுத்துமாறு முதலாளிகளுக்கு ஆலோசனை கூறப்படுகிறது.

# Siapa yang layak?
## யார் தகுதி பெறுவார்கள்?

Pekerja pemastautin (Warganegara Singapura dan Penduduk Tetap) yang bekerja sepenuh dan separuh masa dengan majikan yang sama untuk sekurang-kurangnya 12 bulan semasa pengiraan Bonus PWM. Tempoh pekerjaan selama 12 bulan termasuk cuti bergaji dan cuti berkanun.

PWM போனஸ் கணக்கிடப்படும் சமயத்தில் குறைந்தது 12 மாதங்களாக அதே முதலாளியிடம் வேலை செய்யும் முழுநேர, பகுதிநேர சிங்கப்பூர்வாழ் (சிங்கப்பூரர்/நிரந்தரவாசி) ஊழியர்கள். வேலை செய்த 12 மாதக் காலகட்டத்தில் சம்பளம் தரப்படும் விடுப்பும் சட்டபூர்வ விடுப்பும் உள்ளடங்கும்.

| Senario<br>சூழ்நிலைகள் | Bonus PWM dibayar?<br>PWM போனஸ் தரப்படுமா? |
|---|---|
| (a) Pekerja Sambilan / Pekerja Kasual<br>பகுதிநேர ஊழியர் / நாட்கூலி ஊழியர் | Ya (pro-rata)<br>ஆமாம் (கால விகிதப்படி) |
| (b) Bersara / Penamatan Perkhidmatan Pekerja Kerana Kesihatan<br>பணி ஓய்வு பெறுபவர் / மருத்துவக் காரணங்களால் வெளியேறுபவர்ர | Ya (pro-rata)<br>ஆமாம் (கால விகிதப்படி) |
| (c) Pekerja letak jawatan atas kehendak sendiri<br>ஊழியர் தன் சொந்த விருப்பத்தின்பேரில் வேலையிலிருந்து விலகிக் கொள்கிறார் | Tidak<br>இல்லை |
| (d) Pekerja ditamatkan perkhidmatan kerana salah laku<br>ஊழியர் தவறான நடத்தையின் காரணமாக வேலையிலிருந்து நீக்கப்படுகிறார் | Tidak<br>இல்லை |

Bagi pekerja sambilan, tempoh perkhidmatan (tempoh pekerjaan) akan dikira dari hari pertama mereka bekerja.

பகுதிநேர ஊழியருக்கு, வேலை செய்யத் தொடங்கிய முதல் நாளிலிருந்து சேவைக் காலம் (வேலை செய்த காலகட்டம்) கணக்கிடப்படும்.

| Apa yang dianggap sebagai Bonus PWM?<br>எது PWM போனஸாகக் கருதப்படும் | Apakah yang TIDAK dianggap sebagai Bonus PWM?<br>எது PWM போனஸாகக் கருதப்படாது |
|---|---|
| • Bonus prestasi<br>செயல்திறன் போனஸ் | • Sebarang gaji asas<br>ஏதாவது அடிப்படைச் சம்பளம் |
| • Bonus pengekalan<br>தக்கவைப்பு போனஸ் | • Sebarang bayaran kerja lebih masa<br>ஏதாவது மிகைநேரச் சம்பளம் |
| • Gaji tambahan tahunan (biasanya dikenali sebagai bonus "bulan ke-13")<br>வருடாந்தர சம்பள நிரப்புத்தொகை ("13ஆம் மாத" போனஸ் எனப் பொதுவாக அறியப்படும்) | • Sebarang bayaran balik untuk perbelanjaan khas yang dilakukan oleh seorang pekerja semasa mereka bekerja<br>ஊழியரின் வேலையின்போது ஊழியருக்கு ஏற்படும் சிறப்புச் செலவுகளுக்காகத் திருப்பித் தரப்படும் தொகை |
| • Bonus perayaan<br>விழாக்கால போனஸ் | • Sebarang elaun atau insentif tetap walau bagaimanapun diterangkan<br>வேறுவிதமாகக் குறிப்பிடப்படும் ஏதாவது வழக்கமான செலவுத்தொகை அல்லது ஊக்கத்தொகை |
| • Sebarang kelas bonus yang boleh berubah suai yang mungkin dibayar oleh majikan kepada pekerjanya<br>முதலாளி தனது ஊழியர்களுக்குத் தரக்கூடிய ஏதாவதொரு வகையான மாறுவிகித போனஸ் | |

# Bonus PWM
## PWM போனஸ்

### Sub-Sektor Pengumpulan Sisa

*Bagi Pemungut Sisa Awam dan Pemungut Sisa Umum yang memegang lesen NEA, A, B dan C*

**Bonus PWM mulai 1 Januari 2024 akan dibayar kepada pekerja yang layak**

### கழிவுப்பொருள் சேகரிப்பு துணைத் துறை

*தேசிய சுற்றுப்புற அமைப்பின் A, B, C உரிமங்கள் வைத்திருக்கும் பொது கழிவுப்பொருள் சேகரிப்பாளர்கள் (PWCs), பொதுவான கழிவுப்பொருள் சேகரிப்பாளர்கள் (GWCs) ஆகியோருக்குப் பொருந்தும்*

**PWM போனஸ் 1 ஜனவரி 2024 முதல் தகுதிபெறும் ஊழியர்களுக்கு வழங்கப்படவேண்டும்**

| Peranan Pekerjaan PWM<br>PWM வேலைப் பொறுப்பு | 2024 | 2025 | 2026 | 2027 | 2028 |
|---|---|---|---|---|---|
| **Pemandu Kanan**<br>மூத்த ஓட்டுநர் | ≥ $2920 | ≥ $3130 | ≥ $3340 | ≥ $3550 | ≥ $3760 |
| **Pemandu Hooklift**<br>ஹூக்லிஃப்ட் ஓட்டுநர் | ≥ $2720 | ≥ $2930 | ≥ $3140 | ≥ $3350 | ≥ $3560 |
| **Pemandu**<br>ஓட்டுநர் | ≥ $2620 | ≥ $2830 | ≥ $3040 | ≥ $3250 | ≥ $3460 |
| **Krew**<br>பணியாளர் | ≥ $2320 | ≥ $2530 | ≥ $2740 | ≥ $2950 | ≥ $3160 |
| **Penyelia**<br>மேற்பார்வையாளர் | ≥ $2970 | ≥ $3180 | ≥ $3390 | ≥ $3600 | ≥ $3810 |
| **Ketua Pasukan**<br>அணித் தலைவர் | ≥ $2720 | ≥ $2930 | ≥ $3140 | ≥ $3350 | ≥ $3560 |
| **Krew Kanan**<br>மூத்த பணியாளர் | ≥ $2520 | ≥ $2730 | ≥ $2940 | ≥ $3150 | ≥ $3360 |
| **Krew**<br>பணியாளர் | ≥ $2320 | ≥ $2530 | ≥ $2740 | ≥ $2950 | ≥ $3160 |

### Sub-Sektor Pemulihan Bahan

*Bagi Pemegang Lesen Kemudahan Pelupusan Sisa Am*

**Bonus PWM mulai 1 Januari 2024 akan dibayar kepada pekerja yang layak**

### மூலப்பொருள் மீட்பு துணைத் துறை

*பொதுவான கழிவுப்பொருள் அகற்றல் ஆலைகளின் (GWDFs) உரிமதாரர்களுக்குப் பொருந்தும்*

**PWM போனஸ் 1 ஜனவரி 2024 முதல் தகுதிபெறும் ஊழியர்களுக்கு வழங்கப்படவேண்டும்**

| Peranan Pekerjaan PWM<br>PWM வேலைப் பொறுப்பு | 2024 | 2025 | 2026 | 2027 | 2028 |
|---|---|---|---|---|---|
| **Penyelia Loji**<br>ஆலை மேற்பார்வையாளர் | ≥ $2820 | ≥ $3030 | ≥ $3240 | ≥ $3450 | ≥ $3660 |
| **Ketua Pasukan**<br>அணித் தலைவர் | ≥ $2620 | ≥ $2830 | ≥ $3040 | ≥ $3250 | ≥ $3460 |
| **Penyusun Kanan / Operator Mesin**<br>மூத்த வகைப்பாட்டாளர் / இயந்திரம் இயக்குபவர் | ≥ $2420 | ≥ $2630 | ≥ $2840 | ≥ $3050 | ≥ $3260 |
| **Penyusun**<br>வகைப்பாட்டாளர் | ≥ $2220 | ≥ $2430 | ≥ $2640 | ≥ $2850 | ≥ $3060 |

Untuk maklumat lanjut mengenai pelaksanaan Bonus PWM, sila rujuk laporan penuh Kluster Triparti bagi Industri Pengurusan Sisa (TCWM) dengan mengimbas kod QR atau lungsuri *www.ntuc.org.sg/pwm*

PWM போனஸ் அமலாக்கம் பற்றிய மேல்விவரங்களுக்கு. விரைவுத் தகவல் குறியீட்டின் வாயிலாக அல்லது *www.ntuc.org.sg/pwm* இணையத்தளத்தில் முழுமையான TCWM அறிக்கையைப் படிக்கலாம்